

# 03 வண்டி வருகுது



கட கடா கட கடா வண்டி வருகுது
காளை மாடு இரண்டு பூட்டி
வண்டி வருகுது
டக் டக் டக் டக் வண்டி வருகுது
தாவித் தாவி ஓடும் குதிரை
வண்டி வருகுது
டிறிங் டிறிங் டிறிங் டிறிங் வண்டி வருகுது
எங்கள் அண்ணன் ஓட்டும் சைக்கிள்
வண்டி வருகுது




பாம் பாம் பாம் பாம் வண்டி வருகுது
பாய்ந்து வேகமாக மோட்டார்
வண்டி வருகுது
குப் குப் குப் குப் வண்டி வருகுது
கோட்டை நகரிலிருந்து புகை
வண்டி வருகுது.





**பொது உடைமைகளைப் பேணுவோம்.**
**පොදු දේපළ රැකගනිමු.**



**செயற்பாடு 01**

**பின்வரும் வினாக்களுக்கு விடை கூறுவோம்.**
**පාඩම කියවා අසා ඇති ප්‍රශ්නවලට පිළිතුරු දෙන්න.**

1. கட கடா கட கடா என ஒலி எழுப்பி வரும் வண்டி எது?

   ......................................................................................................

2. தாவித் தாவி ஓடும் வண்டி எது?

   ......................................................................................................

3. அண்ணன் ஓட்டும் வண்டி எது?


   ......................................................................................................

4. பாய்ந்து வேகமாக வரும் வண்டி எது?

   ......................................................................................................

5. கோட்டை நகரில் இருந்து வரும் வண்டி எது?

   ......................................................................................................



**பாட ஆசிரியருக்கான குறிப்பு**

*பாடலைப் பொருள் விளக்கியபின் ஆசிரியர் இசையுடன் பாடிக்காட்ட மாணவர்களும் சேர்ந்து பாடுவர். மாணவர் தனியாகவும் குழுவாகவும் பாடலை இரசனையுடன் பாட சந்தர்ப்பமேற்படுத்துவது அவசியம்.*

**ஒருமை பன்மைச் சொற்களை அவதானிப்போம்.**
**ඒක වචන හා බහු වචන බලමු.**

| | | | |
|---|---|---|---|
| I. | மேசை | - | மேசைகள் |
| | கதிரை | - | கதிரைகள் |
| | வீடு | - | வீடுகள் |
| | வாங்கு | - | வாங்குகள் |
| | காடு | - | காடுகள் |
| II. | படம் | - | படங்கள் |
| | பாடம் | - | பாடங்கள் |
| | மடம் | - | மடங்கள் |
| | மாடம் | - | மாடங்கள் |
| | புத்தகம் | - | புத்தகங்கள் |
| III. | பல் | - | பற்கள் |
| | கல் | - | கற்கள் |
| | வில் | - | விற்கள் |
| | சொல் | - | சொற்கள் |
| | நெல் | - | நெற்கள் |
| IV. | ஆள் | - | ஆட்கள் |
| | முள் | - | முட்கள் |
| | நாள் | - | நாட்கள் |
| | வாள் | - | வாட்கள் |
| | பொருள் | - | பொருட்கள் |


| | | |
|---|---|---|
| V. அம்மா | - | அம்மாமார் |
| அப்பா | - | அப்பாமார் |
| அண்ணா | - | அண்ணாமார் |
| மாமா | - | மாமாமார் |
| மாமி | - | மாமிமார் |

| | | |
|---|---|---|
| நான் | - | நாம், நாங்கள் |
| நீ, நீர் | - | நீங்கள் |

| | |
|---|---|
| அவன்<br>அவள்<br>அவர் | அவர்கள் |

| | | |
|---|---|---|
| அது | - | அவை / அவைகள் |
| இது | - | இவை / இவைகள் |


| | | |
|---|---|---|
| பூ | - | பூக்கள் |
| ஈ | - | ஈக்கள் |



## செயற்பாடு 02

**பின்வரும் ‘அ’ நிரலில் உள்ள ஒருமைச் சொற்களுக்குரிய பன்மைச் சொற்களை ‘ஆ’ நிரலிலிருந்து தெரிவு செய்து எழுதுவோம்.**
**‘අ’ පේළියේ ඇති ඒක වචන පදයට ගැළපෙන බහු වචන ‘ආ’ පේළියෙන් තෝරා ලියන්න.**

| அ | | ஆ |
|---|---|---|
| 1. நான் | (....8....) | 1. மாமாமார் |
| 2. படம் | (............) | 2. நீங்கள் |
| 3. அவன் | (............) | 3. பொருட்கள் |
| 4. நாள் | (............) | 4. அவை |
| 5. கரம் | (............) | 5. பூக்கள் |
| 6. கடை | (............) | 6. பழங்கள் |
| 7. நீ | (............) | 7. சொற்கள் |
| 8. பழம் | (............) | 8. நாம் நாங்கள் |
| 9. பல் | (............) | 9. தங்கைமார் |
| 10. அது | (............) | 10. அவர்கள் |
| 11. அவர் | (............) | 11. பென்சில்கள் |
| 12. பொருள் | (............) | 12. கடைகள் |
| 13. சொல் | (............) | 13. அவர்கள் |
| 14. பென்சில் | (............) | 14. ஈக்கள் |
| 15. தங்கை | (............) | 15. படங்கள் |
| 16. மாமா | (............) | 16. நாட்கள் |
| 17. அண்ணி | (............) | 17. கரங்கள் |
| 18. பூ | (............) | 18. அண்ணிமார் |
| 19. ஈ | (............) | 19. பற்கள் |




## செயற்பாடு 03


**பின்வரும் சொற்களில் ஒருமைச் சொற்களை வேறாகவும் பன்மைச் சொற்களை வேறாகவும் வேறுபடுத்தி எழுதுவோம்.**
**පහත දී ඇති වචනවලින් ඒක වචන පද හා බහු වචන පද තෝරා රූපය තුළ ලියන්න.**


தம்பிமார், கிளி, இலைகள், பட்டங்கள், காடு, வீடுகள், குதிரை, யானைகள், பழம், மோட்டார் வண்டி, விமானம், கப்பல்கள், புகைவண்டிகள், ஓடம், மாட்டு வண்டிகள், காய், தோட்டம், பழங்கள், பப்பாசிப்பழங்கள், புத்தகம், பயிற்சிப் புத்தகங்கள்.

**ஒருமைச் சொற்களை எழுதுவோம்.**
**ඒක වචන පද මෙහි ලියමු.**



**பன்மைச் சொற்களை எழுதுவோம்.**
**බහු වචන පද මෙහි ලියමු.**





## செயற்பாடு 04

**பின்வரும் ஒருமைச் சொற்களுக்குரிய பன்மைச் சொற்களை எழுதுவோம்.**
**පහත දී ඇති වචනවල බහු වචන පද ලියන්න.**

| | |
|---|---|
| **உ-ம்:** காடு | காடுகள் |
| ஆடு | ............................................... |
| மாடு | ............................................... |
| பூனை | ............................................... |
| யானை | ............................................... |
| கிளி | ............................................... |
| புகை வண்டி | ............................................... |
| குதிரை வண்டி | ............................................... |
| மோட்டார் வண்டி | ............................................... |
| மாட்டு வண்டி | ............................................... |
| கப்பல் | ............................................... |
| உ-ம்: படம் | -படங்கள் |
| குடம் | ............................................... |
| கரம் | ............................................... |
| சிரம் | ............................................... |
| தரம் | ............................................... |

| | | |
|---|---|---|
| | பப்படம் | ................................................ |
| | பம்பரம் | ................................................ |
| | வாகனம் | ................................................ |
| | புகையிரதம் | ................................................ |
| | விமானம் | ................................................ |
| | ஓடம் | ................................................ |
| **உ-ம்:** | **பல்** | **- பற்கள்** |
| | கல் | ................................................ |
| | புல் | ................................................ |
| | வில் | ................................................ |
| | சொல் | ................................................ |
| **உ-ம்:** | **ஆள்** | **- ஆட்கள்** |
| | வாள் | ................................................ |
| | முள் | ................................................ |
| | நாள் | ................................................ |
| | பொருள் | ................................................ |

| | |
|---|---|
| உ-ம்: அம்மா | அம்மாமார் |
| தம்பி | ........................................................ |
| தங்கை | ........................................................ |
| அண்ணா | ........................................................ |
| சித்தப்பா | ........................................................ |
| அது | ........................................................ |
| இது | ........................................................ |

**பின்வரும் ஒருமை வினைச் சொற்கள் பன்மை வினைச் சொற்களாக மாறுவதை அவதானிப்போம்.**

படிக்கின்றேன் - படிக்கின்றோம்

குடிக்கின்றேன் - குடிக்கின்றோம்

அடிக்கின்றேன் - அடிக்கின்றோம்

விளையாடுகின்றேன் - விளையாடுகின்றோம்

சாப்பிடுகின்றேன் - சாப்பிடுகின்றோம்

நான் ⟶ நாம் / நாங்கள்


**வாக்கியத்தில் அமைப்போம்.**
**වාක්‍ය හදමු.**

நான் படிக்கின்றேன்.

நாம் நாங்கள் படிக்கின்றோம்

நான் குடிக்கின்றேன்.

நாம் நாங்கள் பால் குடிக்கின்றோம்




**செயற்பாடு 05**

**பின்வரும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான முடிக்கும் சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புவோம்.**
**සුදුසු ක්‍රියා පද යොදා හිස්තැන් පුරවන්න.**

| | | |
|---|---|---|
| நான் | தேநீர் | குடிக்கிறேன். |
| | பாடம் | ______ |
| | பந்து | ______ |
| | சோறு | ______ |
| | பழம் | ______ |

| | | |
|---|---|---|
| நாம் / நாங்கள் | தேநீர் | குடிக்கிறோம். |
| | பாடம் | ________________ |
| | பந்து | ________________ |
| | சோறு | ________________ |
| | பழம் | ________________ |



## செயற்பாடு 06

**பின்வரும் ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுவோம்.**
**පහත දී ඇති වාක්‍ය බහු වචන වාක්‍ය බවට හරවන්න.**

**உதாரணம்:-**

நான் பந்து அடிக்கிறேன்.
நாங்கள் பந்து அடிக்கிறோம்

1. நான் அப்பம் சாப்பிடுகின்றேன்.

   ..........................................................................................................

2. நான் பால் குடிக்கின்றேன்.

   ..........................................................................................................

3. நான் பட்டம் விடுகின்றேன்.


.......................................................................................................

4. நான் வடை சாப்பிடுகின்றேன்.

.......................................................................................................

5. நான் படம் பார்க்கின்றேன்.

.......................................................................................................



## செயற்பாடு 07

பின்வரும் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களை எதிரே உள்ள கோட்டில் எழுதுவோம்.

**පහත දී ඇති වචනවල තේරුම සිංහලෙන් ලියන්න.**

**உ-ம்: காகம்** - **කපුටා**

1. மாட்டு வண்டி ...............................................
2. குதிரை வண்டி ...............................................
3. துவிச்சக்கர வண்டி ...............................................
4. முச்சக்கர வண்டி ...............................................
5. மோட்டார் வண்டி ...............................................
6. புகை வண்டி ...............................................

## செயற்பாடு 08

**பின்வரும் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எதிரே உள்ள கோட்டில் எழுதுவோம்.**
**පහත සඳහන් වචන දෙමළෙන් ලියන්න.**

1. නැව ..............................................
2. ඔරුව ..............................................
3. පහුර ..............................................
4. පල්ලක්කිය ..............................................
5. ගුවන්යානය ..............................................
6. ට්‍රැක්ටරය ..............................................

## செயற்பாடு 09

**தரையில் செல்லும் வாகனங்கள் பத்தின் பெயர்களை அட்டவணைப்படுத்துவோம்.**
**ගොඩබිම ගමන් ගන්නා වාහන දහයක (10) නම් ලියන්න.**

| | சிங்களத்தில் | தமிழில் |
|---|---|---|
| 1. | ...................................... | ...................................... |
| 2. | ...................................... | ...................................... |
| 3. | ...................................... | ...................................... |
| 4. | ...................................... | ...................................... |
| 5. | ...................................... | ...................................... |

6. ....................................
7. ....................................
8. ....................................
9. ....................................
10. ....................................

....................................
....................................
....................................
....................................
....................................

**ஆகாயத்தில் செல்லும் வாகனங்கள் இரண்டின் பெயர்களை எழுதுவோம்.**
**අහසේ ගමන් ගන්නා යානා දෙකක නම් ලියන්න.**

1. ..........................................................................................................
2. ..........................................................................................................

நீரில் செல்லும் வாகனங்கள் மூன்றின் பெயர்களை எழுதுவோம்.
**ජලයේ ගමන් ගන්නා වාහන තුනක නම් ලියන්න.**

சிங்களத்தில்

1. ....................................
2. ....................................
3. ....................................

தமிழில்

.......................................
.......................................
.......................................